# பதவிசிறிபுர பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 24 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய பதவிசிறிபுர பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய பதவிசிறிபுர பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிக்கூற்றுக்ள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

(அ) சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் மீளாய்வாண்டு வரை நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஐந்தொகையில் ரூபா 11,758,210 தொகையான நிலையான சொத்துக்கள் ஏட்டுப் பெறுமதி அடிப்படையில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் இச் சொத்துக்கள் பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 5,998,381 கூட்டுத்தொகையான மூலதனச் செலவினங்களான கிணறு, நீர் வழங்கல் மற்றும் மின்சார வழங்கல் செயற்திட்டங்களின் பெறுமதியானது பிழையாக சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 597,772 ஆகும்.

### 1.3.3 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

**பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 167,637 ஆகும்.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள். கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 1646 | வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவனையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபை விதிகளின் (நிதி மற்றும் நிர்வாகம்) | |
| (i). பகுதி II இன் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையினால் அசையக் கூடிய மற்றும் அசையாத சொத்துக்கள் என்பவற்றிற்காக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) I ஆம் அத்தியாயத்தின் 5 (xi) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்றன தொடர்பில் காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) I ஆம் அத்தியாயத்தின் 5 (xii) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்ற பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து போதிய பிணைவைப்புப் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) XII ஆம் அத்தியாயத்தின் 204 ஆம் பிரிவு | ஆண்டின் இறுதியில் காகிதாதிகள், முத்திரைகள் என்பன கணிப்பீட்டுச் சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) XII ஆம் அத்தியாயத்தின் 217 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை | கொள்வனவு வழிகாட்டின் கோவையின் 3.4.4 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 04 |

சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 367,575 கிரயமான பொருட்களுக்கு கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | (i) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவிவு மற்றும் 2006 ஒக்டோபர் 12 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதம் என்பவற்றிற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட் பொருட்கள் மற்றும் நிர்மாண வேலைகள் என்பவற்றிற்கான கொடுப்பனவில் இருந்து ரூபா 42,602 தொகையான பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | 2009 இன் 1582/35 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிக் கடிதம் | 2009 சனவரி 01 ஆந் திகதிய 1582/35 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதத்தின் 26 ஆவது பிரிவிலுள்ள பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு மற்றும் நிர்மாண வேலைகளின் கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 9,534 தொகையான பெறுமதி சேர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்ளின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 1,084,191 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 231,368 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 640 | 699 | - | 1,011 | 414 | - |
| (ii) | வாடகைகள் | 310 | 448 | 72 | 278 | 130 | 342 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 203 | 182 | 55 | 180 | 142 | 61 |
| (iv) | வேறு வருமானங்கள் | 2,245 | 1,937 | 406 | 7,015 | 5,292 | 1,009 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 222,917 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 5,747 | 4,339 | 1,407 | 4,492 | 3,941 | 951 |
| ஏனையவை | 6,726 | 1,777 | 4,949 | 2,051 | 1,391 | 660 |
| உப மொத்தம் | **12,473** | **6,116** | **6,356** | **6,543** | **5,332** | **1,611** |
| மூலதனச் செலவினம் | 20 | 6,745 | (6,725) | 529 | 1,426 | (897) |
| முழு மொத்தம் | **12,493** | **12,861** | **(369)** | **7,072** | **6,758** | **714** |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 07 | 05 | 02 |
| ஆரம்ப தரங்கள் | 12 | 11 | 01 |
| மொத்தம் | 20 | 16 | 04 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 185,654 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக பெறவேண்டிய கணக்குகள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 160,654 ஆகும்.

### 2.5.2 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன்களின் கூட்டுத்தொகை ரூபா 1,524,000 ஆன அதேவேளை 01 ஆண்டிற்கு மேலாக அறவீடுகள் நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 764,365 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) நிலையான சொத்துக்களின் மீதான கட்டுப்பாடு
(உ) முற்பணங்கள்
(ஊ) பதவியணியினர் கடன்கள்